MINISTRY OF EDUCATION
وزارة التربية والتعليم

THANZEEL ACADEMY
FOR ISLAMIC STUDIES

சவூதி அரேபியா
கல்வி அமைச்சு

தன்ஸீல் அகடமி
தஃவாப் பிரிவு

# அகீதா, ஃபிக்ஹ்

# العقيدة والفقه

தமிழ் மொழி
اللغة التاميلية

முதலாம் ஆரம்ப நிலை வகுப்பு
الصف الأول الابتدائي

| | |
|---|---|
| **நூல்** | **:** அகீதா, ஃபிக்ஹ் - முதலாம் ஆரம்ப நிலை வகுப்பு. |
| **தொகுப்பு** | **:** கல்வி அமைச்சு, சவூதி அரேபியா. |
| **பக்கங்கள்** | **:** 61 |
| **மூல மொழி** | **:** அரபு. |
| **மொழியாக்கம்** | **:** ஹிஸ்புல்லாஹ் (அன்வாரி). |
| **வடிவமைப்பு** | : தன்ஸீல் அகடமி. |
| **வெளியீடு** | : தன்ஸீல் அகடமியின் தஃபாப் பிரிவு. |
| **ஈமெயில்** | : thanzeeledu@gmail.com |

THANZEEL ACADEMY
FOR ISLAMIC STUDIES

**தன்ஸீல் அகடமி** வாட்சப்
குழுமத்தில் இணைவதற்கு **Scan**
அல்லது **Click** செய்யவும்.

# முன்னுரை

எழுதக் கற்றுத் தந்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரித்தானது. அவன் மனிதர்களுக்கு அவர்கள் அறியாத அனைத்தையும் கற்றுக்கொடுத்துள்ளான். அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் > அவர்களுக்கு அல்லாஹ்வின் அருளும், ஈடேற்றமும் என்றென்றும் உண்டாவதாக. அவர்கள் மக்களை அறியாமை எனும் இருளிலிருந்து கல்வி எனும் வெளிச்சத்திற்கு வழிகாட்டியவர்கள்.

அகீதா என்பது அனைவரும் அறிந்திருக்க வேண்டிய ஒரு பகுதியாகும். இதில் அல்லாஹ்வைப் பற்றியும், ஈமான் கொள்ள வேண்டிய ஆறு அம்சங்கள் பற்றியும் ஒருவர் கற்றுக்கொள்வார். இதுவே தலை சிறந்த அறிவாகும். இதைக் கற்பதால் மாத்திரமே ஒருவரின் நற்செயல்களுக்கான கூலிகள் கிடைப்பதும், நற்செயல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதும் அமைந்துள்ளது. ஒருவர் மனநிம்மதியுடனும், சந்தோசத்தோடும் வாழ்வதற்கு இவ் அறிவு அவசியமாகிறது. அவ்வாறே மார்க்க சட்டங்கள் பற்றி கற்றுக்கொள்வதும் தலையாய கடமையாகும். இதன் மூலம் வணக்கங்களை எவ்வாறு சரிவர நிறைவேற்றுவது எனும் அறிவு ஒருவருக்குக் கிடைக்கிறது. நபி > அவர்கள் கூறினார்கள், "அல்லாஹ் யாருக்கு நலவை நாடுகிறானோ அவருக்கு மார்க்கத்தின் விளக்கத்தை வழங்குவான்"[1] . இதனாலே கல்வி அமைச்சு அனைத்து வகுப்புகளிலும் மாணவர்களுக்கு அகீதா, ஃபிக்ஹ் ஆகிய பாடங்களை பாடவிதானமாக அறிவித்துள்ளது. இதன் மூலம் ஒரு மாணவர் சிறந்த ஒழுக்கமுள்ளவராகவும், வணக்கங்களை சரிவர நிறைவேற்றும் அடியாராகவும் மாறுவார்.

இப்புத்தகத்தில் அகீதா பாடப்பரப்பில் ஒரு மாணவர் இறைவன், வேதம், நபி ஆகிய மூன்று முக்கிய விடயங்கள் பற்றி கற்றுக்கொள்வார். ஃபிக்ஹ் பாடப்பரப்பில் சுத்தம், வுழூ செய்யும் முறை, தொழும் முறை, தொழுகையை முறிக்கும் காரியங்கள் போன்றவற்றை கற்றுக்கொள்வார்.

இப்பாடங்கள் அனைத்தும் படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளதோடு, மாணவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் எளிய வசன நடையில் தொகுப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடம் முடியும் போதும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்களும் இதில் கூறப்படுள்ளன.

---

1 புஹாரி 07.

## ஆசிரியர்களுக்கான சில ஆலோசனைகள்:

1. உளத்தூய்மையுடன் செயற்படுவது நற்செயல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனையாகும். எனவே மாணவர்களுக்கு கற்பிக்கும் போது உளத்தூய்மையுடன் செயற்பட வேண்டும்.

2. மாணவர்கள் என்போர் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமானிதமாகும். மாணவர்களின் உள்ளங்களில் விதைக்கும் அறிவும் அமானிதமாகும். எனவே சரியான அறிவை அவர்களுக்கு போதித்து அமானிதத்தை காக்க வேண்டும்.

3. அகீதா பாடம் என்பது செயல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான வழிகாட்டலாகும். எனவே அதைக் கற்றுக்கொடுப்பதில் மிகவும் கவனத்தை கையாள வேண்டும்.

4. எம்மைச் சுற்றி நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தும் அடையாளங்களாகும். மழை பெய்தல், மின்வெட்டுதல், சூரியன் உதித்தல் மறைதல் போன்ற அனைத்தையும் சிறந்த உதாரணங்களாக காட்டி, மாணவர்கள் உள்ளத்தில் ஓரிறைக் கொள்கையை விதைக்க வேண்டும்.

5. ஃபிக்ஹ் பாடம் என்பது அல்லாஹ் சரியான முறையில் அறிந்த பின், அவன் கூறிய அடிப்படையில் அவனை எவ்வாறு வணங்க வேண்டும் என்பதைப் போதிக்கிறது. சுத்தமாக இருத்தல், வுழூசெய்தல், தொழுதல் என்பவற்றை சரிவர மாணவர்களுக்கு போதிக்க வேண்டும்.

6. இப்பாடங்களை மேலும் சிறந்த முறையில் நடாத்துவதற்கு ஒவ்வொரு தலைப்பையும் நடைமுறையோடு ஒப்பிட்டுக் கூற வேண்டும். அப்போதே மாணவர்கள் இப்பாடங்களை ஆர்வமாக கற்றுக்கொள்வார்கள்.

நபி > அவர்கல் கூறினார்கள், "ஒரு முஃமினான அடியான் தனது மரணத்திற்குப் பிறகும் தனது செயல்களுக்கும், நற்கருமங்களுக்கும் நன்மையைப் பெறவேண்டுமாக இருந்தால் தான் கற்ற அறிவை பிறருக்கும் பகிர வேண்டும்."[1]

1 இப்னுமாஜா 242

بسم الله الرحمن الرحيم

# உள்ளடக்கம்

## அகீதா பாடப்பரப்பு


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| பாடம் 01 : | மனிதன் அவசியம் அறியவேண்டியவை. | 07 |
| பாடம் 02 : | எனது இறைவன் அல்லாஹ். | 09 |
| பாடம் 03 : | இரட்சகனை அறிதல். | 11 |
| பாடம் 04 : | படைப்பாளன் அல்லாஹ். | 13 |
| பாடம் 05 : | படைப்பினங்களிலுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகள். | 17 |
| பாடம் 06 : | ரிஸ்க் அளிப்பவன் அல்லாஹ். | 19 |
| பாடம் 07 : | அல்லாஹ்வை மாத்திரமே வணங்குகிறேன். | 22 |
| பாடம் 08 : | எனது மார்க்கம் இஸ்லாம். | 24 |
| பாடம் 09 : | முஹம்மத் > எனது நபி. | 28 |
| பாடம் 10 : | அல்குர்ஆன். | 32 |


## ஃபிக்ஹ் பாடப்பரப்பு


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| பாடம் 01 : | சுத்தம். | 35 |
| பாடம் 02 : | வுழு செய்யும் முறை. | 38 |
| பாடம் 03 : | கடமையான தொழுகைகள். | 43 |
| பாடம் 04 : | தொழும் முறை. | 47 |
| பாடம் 05 : | அத்தஹிய்யாத்து. | 53 |
| பாடம் 06 : | நபி > அவர்கள் மீது ஸலவாத்து கூறுதல். | 56 |
| பாடம் 07 : | தொழுகையை முறிப்பவை. | 58 |

# அகீதா

பாடம் 01

# மனிதன் அவசியம் அறியவேண்டியவை

உனது மார்க்கம் என்ன ?

எனது இறைவன் அல்லாஹ்

உனது நபி யார் ?

எனது மார்க்கம் இஸ்லாம்

உனது இறைவன் யார் ?

எனது நபி முஹம்மத் >



## கேள்வி 01: பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

| | |
|---|---|
| எனது இறைவன் | ........................................................ |
| எனது மார்க்கம் | இஸ்லாம் |
| எனது நபி | ........................................................ |

நபி > அவர்கள் கற்றுத் தந்த இந்த துஆவை காலையிலும் மாலையிலும் மூன்று முறை ஓதுவேன்.

رَضِيتُ بِاللهِ رَبًّا، وَبِالْإِسْلَامِ دِينًا وَبِمُحَمَّدٍ > نَبِيًّا

அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மத் > அவர்களை நபியாகவும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.





### ஆசிரியருக்கு

- நபி > அவர்கள் கூறினார்கள்: யார் காலையிலும், மாலையிலும் "رَضِيتُ بِاللهِ رَبًّا، وَبِالْإِسْلَامِ دِينًا وَبِمُحَمَّدٍ > نَبِيًّا" என்று மூன்று முறை கூறுகிறாரோ மறுமையில் அவரை பொருந்திக்கொள்வது அல்லாஹ்வின் உரிமையாகிறது. -நூல்: அஹ்மத் 23111-.
- அல்லாஹ்வை வணங்குவதற்காக இல்லாமையிலிருந்து மனிதனைப் படைத்து, அவனுக்கு நல்லவற்றிலிருந்து உணவு வழங்கிய அல்லாஹ்வின் மகிமையை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- முஹம்மத் > அவர்களை எமக்கான நபியாக அல்லாஹ் அனுப்பியது அவனின் அருள் என்பதை தெளிவுபடுத்தல். அவருக்குக் கட்டுப்பட்டவர் இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபெறுவார்.
- மனிதர்களுக்கான மார்க்கமாக அல்லாஹ்வால் இஸ்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை விளக்கவும். அல்லாஹ் கூறுகிறான், "இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன்;. மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்;. இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்". (அல்குர்ஆன் 05:03).
- மாணவர்களின் உள்ளத்தில் இஸ்லாத்தை விட்டுக்கொடுக்காமல் இருக்கும் மனப்பாண்மையை விதைக்கவும்.

**பாடத்தின் நோக்கம்:**

01. மனிதன் அவசியம் அறியவேண்டியவற்றை மாணவர்களுக்கு சொல்லிக்கொடுத்தல்.
02. இஸ்லாத்தின் மகிமையை மாணவர்களின் உள்ளங்களில் பதியவைத்தல்.

பாடம் 02

# எனது இறைவன் அல்லாஹ்

உனது இறைவன் யார்?

எனது இறைவன் அல்லாஹ்



அல்லாஹ் எங்கு இருக்கிறான்?

அல்லாஹ் வானத்தில் இருக்கிறான்



உன்னைப் படைத்து, பரிபாலிப்பது யார்?

என்னை படைத்து, பரிபாலிப்பது அல்லாஹ்



# கலந்துரையாடல்

1. உனது இறைவன் யார்?
2. அல்லாஹ் எங்கு இருக்கிறான்?
3. உன்னை படைத்து, பரிபாலிப்பது யார்?

**ஆசிரியருக்கு**

- நபி > அவர்கள் ஒரு அடிமைப் பெண்ணிடம், "அல்லாஹ் எங்கே இருக்கின்றான்?" என்று கேட்டார்கள். அவள், "வானத்தில்" என்று பதிலளித்தாள் -ஹதீஸின் சுருக்கம்-. நூல்: முஸ்லிம் 537.
- மேற்கண்ட நீண்ட ஹதீஸை மாணவர்களுக்கு விளங்கப்படுத்தவும்.
- அல்லாஹ் தனது வெளிப்படையான, மறைமுகமான அருளால் மனித்ரகளை பரிபாலிக்கிறான். வெளிப்படையான அருள் என்பது பாதுகாப்பு, ஆரோக்கியம் போன்றவற்றைக் குறிக்கும். மறைமுகமான அருள் என்பது ஈமான், நேர்வழி போன்றவற்றைக் குறிக்கும்.
- மாணவர்களின் உள்ளங்களில் அல்லாஹ்வைப் பற்றிய சிறந்த புரிதலை பதியவைக்கவும்.

**பாடத்தின் நோக்கம்:**

01. மாணவர் அல்லாஹ்வை மகிமைப்படுத்த வேண்டும்.
02. தனது படைப்புகளை விட அல்லாஹ் உயர்ந்தவன் என்பதை அறிய வேண்டும்.
03. தனது படைப்புகள் மீதுள்ள அல்லாஹ்வின் சில அருட்கொடைகளைப் பற்றி அறிய வேண்டும்.

பாடம் 03

# இரட்சகனை அறிதல்



வானங்கள், பூமி, இரவு, பகல் போன்ற அல்லாஹ்வின் படைப்பினங்கள், அவனது அத்தாட்சிகளின் மூலம் அவனை அறிகிறேன்.

என்னைப் படைத்தவன் அல்லாஹ்.
எனக்கு உயிர் கொடுத்தவன் அல்லாஹ்.
என்னை மரணிக்கச் செய்பவன் அல்லாஹ்.
அவனிடமே நான் மீண்டும் செல்ல இருக்கிறேன்.

# கலந்துரையாடல்

1. எவற்றின் மூலம் உனது இறைவனை அறிகிறாய்?
2. உனக்கு உயிர் தந்து, உன்னை மரணிக்கச் செய்பவன் யார்?

**ஆசிரியருக்கு**

- அல்லாஹ்வின் செயற்பாடுகளுக்கான வேறு உதாரணங்களைக் குறிப்பிடவும். உ+ம்: மழை பொழிய வைத்தல், தாவரங்களை முளைக்கச் செய்தல், துஆவுக்கு பதிலளித்தல், கஷ்டங்களை நீக்குதல்.
- அல்லாஹ்வின் படைப்பினங்கள் பற்றியும், அவனின் அத்தாட்சிகள் பற்றியும் மாணவர்களை சிந்திக்க வைக்கவும்.
- அல்லாஹ்விடம் மீண்டும் செல்லுதல் என்பது, விசாரணைக்காகவும், செய்த செயல்களுக்கான கூலிகளைப் பெறுவதற்காகவும் என்பதை தெளிவுபடுத்தவும்
- மறுமையில் மீண்டும் எழுப்பாட்டப்படுவதைப் பற்றிய நம்பிக்கையை மாணவர்களின் உள்ளங்களில் பதியவைக்கவும்.



**பாடத்தின் நோக்கம்:**

01. அல்லாஹ்வின் படைப்புகளையும், அத்தாட்சிகளையும் மாணவர் அறிதல்.
02. அவற்றைப் பற்றி ஆழமாக சிந்தித்தல்.
03. மறுமையில் மீண்டும் உயிருடன் எழுப்பாட்டப்படுவதை மாணவர் நம்பிக்கை கொள்ளல்.

# படைப்பாளன் அல்லாஹ்



என்னையும், ஏனைய மனிதர்களையும் படைத்தவன் அல்லாஹ்.

வானங்கள், பூமியைப் படைத்தவனும் அல்லாஹ்.

சூரியன், சந்திரன், இரவு, பகல் என அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ்.

# பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

1- எம்மைப் படைத்தவன் ..............................................

2- வானங்கள், பூமியைப் படைத்தவன் ..............................................

3- சூரியன், சந்திரனைப் படைத்தவன் ..............................................

**ஆசிரியருக்கு**

- படைப்புகளின் மகத்துவத்தை அறிவது அவற்றைப் படைத்தவனின் மகத்துவத்தையும், வணக்கங்களை அவனுக்கு மாத்திரம் செய்ய வேண்டும் எனும் மனோநிலையையும் புரிய வைக்கிறது.
- இப்பாடத்தை வகுப்பிற்கு வெளியில் நடாத்துவது சிறந்தது. அப்போது மாணவர்கள் வானம், பூமி, மரங்கள் என அல்லாஹ்வின் படைப்புகளைப் பற்றி சிந்திப்பதற்கு வசதியாக இருக்கும்.
- அல்லாஹ்வின் வேறு படைப்புகளுக்கான உதாரணங்களை மாணவர்களிடம் கேட்கவும்.
- அல்லாஹ்வின் படைப்புகள் பற்றி சிந்திக்க வைத்து, அவற்றிலுள்ள மகத்துவத்தை மாணவர்களிடம் கேட்டகவும்.

**பாடத்தின் நோக்கம்:**

01. மாணவர் அல்லாஹ்வின் படைப்புகள் பற்றி அறிதல்.
02. இல்லாமையிலிருந்து உருவாக்கப்பட்ட மனிதனின் படைப்பைப் பற்றி மாணவர்கள் அறிதல்.




அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்தான் அனைத்துப் பொருட்களையும் படைப்பவன்; இன்னும், அவனே எல்லாப் பொருட்களின் பாதுகாவலனுமாவான்."
(அல்குர்ஆன் 39:62)

அனைத்தையும் படைத்த அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவது என்மீது கடமையாகும்.

## கலந்துரையாடல்

1. அல்லாஹ்வின் படைப்புகள் மூன்றைக் கூறுக.
2. அனைத்தையும் படைப்பவன் அல்லாஹ் என்பதற்கு ஆதாரம் கூறுக.

3 அல்லாஹ் கூறுகிறான், "அவன்தான் சூரியனைச் (சுடர்விடும்) பிரகாசமாகவும், சந்திரனை ஒளிவுள்ளதாகவும் ஆக்கினான்." (அல்குர்ஆன் 10:05)

**கீழுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புக:**

சூரியனின் பயன்கள்: ..........................................................................................

சந்திரனின் பயன்கள்: ..........................................................................................

**ஆசிரியருக்கு**

- படைப்பாளன் அல்லாஹ் ஒருவன் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- அனைத்தையும் படைத்த அல்லாஹ் ஒருவனை மாத்திரமே வணங்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்தவும்.
- கடல், மரங்கள் போன்ற அல்லாஹ்வின் படைப்புகளின் பயன்களை விளக்கவும்.

**பாடத்தின் நோக்கம்:**

01. மாணவர் அல்லாஹ்வின் படைப்புகள் பற்றி அறிதல்.
02. அனைத்தையும் படைப்பவன் அல்லாஹ் என்பதற்கான ஆதாரங்களை அறிதல்.
03. அல்லாஹ்வின் படைப்புகள் பற்றி சிந்தித்தல்.

பாடம் 05

# படைப்புகளிலுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகள்



**அல்லாஹ் கூறுகிறான்,**

**"வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பைப் பற்றி சிந்தித்து, "எங்கள் இறைவனே! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை, நீ மகா தூய்மையானவன்; (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக!" (என்று அறிவுடையோர் பிரார்த்திக்கின்றனர்)"**

**(அல்குர்ஆன் 03:191)**

**இவை அனைத்தையும் படைப்பவன் வணங்கப்படுவதற்கு தகுதியானவன்.**

**ஆசிரியருக்கு**

- மாணவர்களுக்கு ஏற்ற வகையில் படைப்பினங்களின் மகத்துவத்தை தெளிவுபடுத்தவும்.
- அல்லாஹ்வின் அத்தாட்சிகளை சிந்திப்பதால் ஒரு முஸ்லிமிற்கு ஈமானும், அல்லாஹ் பற்றிய புரிதலும், அவன் மீது அன்பும் அதிகரிக்கிறது என்பதை தெளிவுபடுத்தவும்.
- தன்னைச் சூழவுள்ள படைப்புகள் பற்றியும், அவற்றின் பயன்கள் குறித்தும் மாணவர்களை சிந்திக்கத் தூண்டவும்.



**பாடத்தின் நோக்கம்:**

01. மாணவர் படைப்புகளின் மகிமையை உணர்தல்.
02. அல்லாஹ்வின் படைப்புகள், அவற்றின் அத்தாட்சிகள் பற்றி சிந்தித்தல்.

பாடம் 06

# ரிஸ்க் அளிப்பவன் அல்லாஹ்



வானத்திலிருந்து மழையை இறக்குபவன் அல்லாஹ்.

எமக்கு உணவைத் தருபவன் அல்லாஹ்.





எமக்கு உடல் உறுப்புகளைத் தந்தவன் அல்லாஹ்.

# கலந்துரையாடல்

1. **எமக்கு உணவளிப்பவன் யார்?**
2. **பின்வரும் இடைவெளியை நிரப்புக.**

**இரு கண்களால் எனக்கு கிடைக்கும் பயன்கள்:**

..............................................................................................................................

**இரு காதுகளால் எனக்கு கிடைக்கும் பயன்கள்:**

..............................................................................................................................

**ஆசிரியருக்கு**

- மழையின் பயன்களை விளக்கவும்.
- நீரின் அவசியத்தையும், அதை வீண்விரயம் செய்யாமல் பயன்படுத்தும் முறைகளையும் விளக்கவும்.
- கண்கள், காதுகளின் மகிமையை மாணவர்களுக்கு உணர்த்தவும்.
- அல்லாஹ் எமக்கு ரிஸ்க் அளிப்பது அவனை சிறந்த முறையில் வணங்குவதற்காகும் என்பதை புரிய வைக்கவும்.
- எஞ்சிய உணவுகளை அதற்குரிய இடங்களில் போடுவதும் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பதாகும் என்பதை விளக்கவும். அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பது எமக்கு மேலும் உணவு கிடைக்க காரணமாக இருக்கும் என்பதையும் விளக்கவும்.
- அல்லாஹ் கூறுகிறான், "("இதற்காக எனக்கு) நீங்கள் நன்றி செலுத்தினால், உங்களுக்கு நிச்சயமாக நான் (என்னருளை) அதிகமாக்குவேன்" -(அல்குர்ஆன் 14:07)-



**பாடத்தின் நோக்கம்:**

01. அல்லாஹ்வின் அருட்கொடைகளை மாணவர்கள் அறிதல்.
02. அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்காக அவனுக்கு நன்றியுடன் இருத்தல்.

# ரிஸ்க் அளிப்பவன் அல்லாஹ்

எமக்கு ஆரோக்கியத்தையும், பாதுகாப்பையும் வழங்கியவன் அல்லாஹ்

**அல்லாஹ் கூறுகிறான்**

நிச்சயமாக அல்லாஹ்தான் உணவு அளித்துக் கொண்டிருப்பவன்; பலம் மிக்கவன்; உறுதியானவன்.

**(அல்குர்ஆன் 51:58)**

**எனவே எனக்கு அருட்கொடைகளை வழங்கும் அல்லாஹ்வுக்கு எப்போதும் நன்றியுள்ளவனாக நான் இருக்க வேண்டும்.**

## கலந்துரையாடல்



1. அனைத்தையும் எமக்கு தருவது யார்?

2. இப்படத்திலிருந்து அல்லாஹ்வின் அருட்கொடைகள் இரண்டைக் குறிப்பிடுக.

3. கீழுள்ள இடைவெளியை நிரப்புக.
   ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்த இவ்வாறு கூற வேண்டும் ...............................................................................................................

4 அல்லாஹ் மழையைத் தராவிட்டால் நிலத்திற்கு என்ன நடக்கும்?

........................................................................................................................

5 அல்லாஹ் மழையைத் தந்தால் நிலத்திற்கு என்ன நடக்கும்?

........................................................................................................................





**ஆசிரியருக்கு**

- ரிஸ்க் அளிப்பவன் அல்லாஹ் மாத்திரம் தான் என்பதை மாணவர்களுக்கு உணர்த்தவும்.
- அல்லாஹ்விடம் ஆரோக்கியம், பாதுகாப்பு போன்றவற்றை கேட்டுப்பெறுமாறு வழிகாட்டவும்.
- அருட்கொடைகள் கிடைக்கும் اَلْحَمْدُ لِلّٰهِ என்று கூறத் தூண்டவும்.
- அல்லாஹ்வின் அருட்கொடைகள் பற்றி அதிகம் பேச வைக்கவும். இது அல்லாஹ்வின் மீதான அன்பை வளர்க்கும் என முன்சென்ற அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.



**பாடத்தின் நோக்கம்:**

01. ரிஸ்க் அளிப்பவன் அல்லாஹ் என்பதற்கான ஆதாரங்களை மாணவர் அறிதல்.
02. அல்லாஹ் தனக்கு வழங்கியிருக்கும் ரிஸ்க்களுக்கும் நன்றிசெலுத்த தயார்படுத்தல்.

பாடம் 07

# அல்லாஹ்வை மாத்திரமே வணங்குகிறேன்

நான் ஒரு முஸ்லிம்.
அல்லாஹ்வை மாத்திரமே
வணங்குவேன்

நான் ஒரு முஸ்லிம்.
அல்லாஹ் மீது அன்பு கொண்டு,
அவனுக்கு கட்டுப்படுவேன்.

நான் ஒரு முஸ்லிம்.
அல்லாஹ்வுக்கு பயப்படுவேன்.
பாவம் செய்யாமல் இருப்பேன்.

நான் ஒரு முஸ்லிம்.
அல்லாஹ்விடம் மட்டுமே பிரார்த்திப்பேன்.
ஏனையோரிடம் பிரார்த்திக்க மாட்டேன்.

# கலந்துரையாடல்

1. நாங்கள் யாரை மாத்திரம் வணங்க வேண்டும்?

2. பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

**(சுவனம், தொழுகை, அல்குர்ஆன், அல்லாஹ்)**

- ஒரு முஸ்லிம் .................................................. மாத்திரமே வணங்க வேண்டும்.
- ஒரு முஸ்லிம் நேரம் தவறாது .............................................. நிறைவேற்ற வேண்டும்.
- அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை பெறவும், ............................................ நுழையவும், ஒரு முஸ்லிம் ............................................ அதிகம் ஓத வேண்டும்.

**ஆசிரியருக்கு**

- படைப்பாளன், கொடையாளன், உயிர்கொடுப்பவன், மரணிக்கச் செய்பவன் அல்லாஹ் மாத்திரமே என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும். அவன் மாத்திரமே வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் என்பதை உறுதிப்படுத்தவும்.
- தொழுகை, நோன்பு, துஆ, குர்பானி போன்ற வணக்கங்கள் பற்றி மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- வணக்கங்களை செய்வதற்கு மாணவர்களை ஆர்வமூட்டவும்.
- சொல், செயல் போன்றவற்றில் அல்லாஹ்வை கோபமூட்டும் விடயங்களை செய்யாமல் இருக்க வழிகாட்டவும்.

**பாடத்தின் நோக்கம்:**

01. மாணவன் அல்லாஹ்வை மாத்திரமே வணங்க வேண்டும்.
02. வணக்கங்கள் பற்றி மாணவன் அறிய வேண்டும்.
03. அல்லாஹ்வை கோபமூட்டும் பாவங்களில் மாணவன் வீழாமல் இருக்க வேண்டும்.
04. இஸ்லாமிய போதனைகளை மாணவன் கடைபிடிக்க வேண்டும்.

பாடம் 08

# எனது மார்க்கம் இஸ்லாம்

## நான் ஒரு முஸ்லிம்.
## எனது மார்க்கம் இஸ்லாம்.

அல்லாஹ் கூறுகிறான்:
"நிச்சயமாக (தீனுல்) இஸ்லாம் தான் அல்லாஹ்விடத்தில் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கமாகும்."
-அல்குர்ஆன் 03:19 -




அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதும், அவனுக்கு கட்டுப்படுவதும், பாவம் செய்யாமல் இருப்பதும், இஸ்லாம் தவிர வேறு மார்க்கங்களை பின்பற்றாமல் இருப்பதுமாகும்.

# கலந்துரையாடல்

1. உனது மார்க்கம் என்ன?

2. முதலாம் குழுவில் உள்ளவற்றை, பொருத்தமான இரண்டாம் குழுவுடன் இணைக்குக.

| | |
|---|---|
| அல்லாஹ்வை | வேறு மார்க்கங்களை பின்பற்றக் கூடாது. |
| பாவம் செய்வதை | ஒருமைப்படுத்த வேண்டும். |
| இஸ்லாத்தை தவிர | விட வேண்டும். |

**ஆசிரியருக்கு**

- இஸ்லாத்தின் அர்த்தத்தை முழுமையாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தல். இம்மார்க்கத்தை விரும்பும் வகையில் அவர்களுக்கு இதன் மகிமையை எடுத்துரைக்கவும்.
- இஸ்லாத்தை பின்பற்றுவது மாத்திரமே எம்மை நரகிலிருந்து பாதுகாத்து, சுவனத்தில் நுழைவிக்கும் என்பதை தெளிவுபடுத்தவும்.
- முஸ்லிம்களோடும், பிறமத மக்களோடும் இரக்கமாக நடப்பதற்கும், இஸ்லாத்திற்கு மாற்றமாக செயற்படுவோரை விட்டும் தூரமாக இருப்பதற்கும், முஸ்லிம் அல்லாதோருக்கு ஒப்பாக நடக்காமல் இருக்கவும் மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.



**பாடத்தின் நோக்கம்:**

01. இஸ்லாத்தின் அர்த்தத்தை மாணவர் புரிய வேண்டும்.
02. அல்லாஹ்வுக்கு இணைவைப்பதை விட்டும் மாணவரை தூரப்படுத்த வேண்டும்.
03. முஸ்லிம்களோடும், பிறமத மக்களோடும் இரக்கமாக நடக்க வேண்டும்.

# இஸ்லாத்தின் அடிப்படை

لَا إِلٰهَ إِلَّا اللهُ مُحَمَّدٌ رَسُوْلُ اللهِ

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் அல்லாஹ்வின் தூதர் எனவும் நான் சாட்சி கூறுகிறேன்.

**இஸ்லாத்தை தவிரவுள்ள ஏனைய மார்க்கங்களை பின்பற்றக் கூடாது.**

அல்லாஹ் கூறுகிறான்:

“இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் தான் இருப்பார்.”

-அல்குர்ஆன் 03:85-

**எனவே நான் ஒரு முஸ்லிம். இஸ்லாத்தை தவிர வேறு மார்க்கங்களை பின்பற்ற மாட்டேன்.**

# கலந்துரையாடல்

1 இஸ்லாத்தின் அடிப்படை யாது?

1 பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

(இஸ்லாத்தை, நரகில்)

.................................................................. தவிரவுள்ள ஏனைய மார்க்கங்க
அனைத்தும் தவறானவை. இஸ்லாம் மார்க்கத்தில் மரணிக்காதவ
........................................................ நுழைவார்.

1 இஸ்லாத்தை தவிர வேறு எதையும் அல்லாஹ் மார்க்கமா
ஏற்கமாட்டான். அதற்கான ஆதாரத்தைக் குறிப்பிடு.

1 பின்வருபவைகளில் ஒரு முஸ்லிம் கலிமா சொல்லு
சந்தர்ப்பத்தை தேர்வு செய்து (√) அடையாளமிடுக.

| பாங்கின் போது | சாப்பிடும் போது | வுழு செய்த பிறகு | தும்மி பிறகு |
|---|---|---|---|
| ○ | ○ | ○ | ○ |

## ஆசிரியருக்கு

- புஹாரி 7372, முஸ்லிம் 19 எனும் இலக்கங்களில் உள்ள முஆத் Ó அவர்களின் ஹதீஸை மாணவர்களுக்கு விளங்கப்படுத்தவும்.
- கலிமாவின் முக்கியத்துவத்தை விளக்கவும்.
- பௌதம், இந்து, யூதம், கிறிஸ்தவம் போன்ற மார்க்கங்களைப் பற்றியும் விளக்கவும்.
- இஸ்லாம் மார்க்கத்தில் மரணிக்காதவர் நரகில் நுழைவார் என்பதை தெளிவுபடுத்தவும்.



**பாடத்தின் நோக்கம்:**

01 இஸ்லாத்தின் அடிப்படையை மாணவர் அறிய வேண்டும்.

பாடம் 09

# எனது நபி முஹம்மத் >

முஹம்மத் இப்னு அப்துல்லாஹ்
இப்னு அப்துல் முத்தலிப்

**அனைத்து மக்களுக்குமான நபியாக அல்லாஹ் இவரை அனுப்பினான்.**

**அல்லாஹ்வை மாத்திரம் மக்கள் வணங்க வேண்டும் எனவும், ஏனையோரை வணங்கக் கூடாது எனவும் மக்களுக்கு போதனை செய்தார்.**

## கலந்துரையாடல்

1 மேலுள்ள வாசகங்களை வைத்து கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.

எனது நபியின் பெயர் ........................................

........................................ அல்லாஹ் அவரை அனுப்பினான்.

........................................

........................................ மக்களுக்கு போதனை செய்தார்.

## ஆசிரியருக்கு

- அல்லாஹ்வை மாத்திரம் வணங்க வேண்டுமென்று போதிப்பதற்கு முஹம்மத் > அவர்களை நபியாக அல்லாஹ் அனுப்பியது மக்களுக்கான மிகப்பெரிய அருளாகும்.
- நபி > அவர்கள் மீது அன்பாக இருப்பதற்கான அடையாளம் அவர் கூறியவற்றை செய்வதும், தடுத்தவற்றை விட்டும் விலகியிருப்பதுமாகும் என்பதை தெளிவுபடுத்தவும்.
- அல்லாஹ் அல்லாதோரை வணங்குவதை விட்டும் மாணவர்களை எச்சரிக்கவும்.
- நபியவர்களின் பெயர் கேட்கும் போது ஸலவாத்து கூறுவதற்கு மாணவர்களை ஆர்வமூட்டவும்.
- நபி > அவர்கள் பிறந்த வரலாறை இலகு நடையில் மாணவர்களுக்கு கூறவும்.



**பாடத்தின் நோக்கம்:**

01. நபி > அவர்களின் பரம்பரைப் பெயர் தொடரை மாணவர் அறிந்திருத்தல்.
02. நபி > அவர்கள் உலக மக்கள் அனைவருக்குமான நபி என்பதை அறிதல்.
03. முஹம்மத் > அவர்கள் நபியாக அனுப்பப்பபட்ட நுட்பத்தை அறிந்திருத்தல்.

நபி > அவர்களுக்கு யார் கட்டுப்பட்டு நடக்கிறாரோ அவர் சுவனம் நுழைவார்.

நபி > அவர்களுக்கு யார் கட்டுப்படாமல் நடக்கிறாரோ அவர் நரகில் நுழைவார்.

எனவே நபி > அவர்கள் மீது அன்பு கொண்டு, அவருக்கு கட்டுப்பட்டு நடப்பது என் மீது கடமையாகும்.

# கலந்துரையாடல்

**1** பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

யார் நபி > அவர்களுக்கு கட்டுப்பட்டு நடக்கிறாரோ அவர் ........................................................ நுழைவார்.

யார் நபி > அவர்களுக்கு கட்டுப்படாமல் நடக்கிறாரோ அவர் ........................................................ நுழைவார்.

நபி > அவர்கள் உண்மையாளர், .............................................................................. எனும் பண்புகளைப் பெற்றவர்.

**2** நபியவர்களின் பெயரைக் கேட்டால் என்ன கூற வேண்டும்?

**ஆசிரியருக்கு**

- நபி > அவர்கள் மீது அன்பு கொண்டு, அவருக்கு கட்டுப்படவும், அவருக்கு மாற்றம் செய்யாமல் இருக்கவும் மாணவர்களை ஆர்வமூட்டவேண்டும்.
- “மனிதன் யார்மீது அன்புகொண்டுள்ளானோ அவர்களுடன்தான் (மறுமையில்) இருப்பான்” -புஹாரி 6169- எனும் ஹதீஸை சுட்டிக்காட்டி, நபியவர்கள் மீது அன்புகொள்வபர் அவருடன் சுவனத்தில் இருப்பார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.
- உண்மையாளர், நம்பிக்கையாளர் போன்ற நபியவர்களின் பல பண்புகளை மாணவர்களுக்கு விளக்கி, அவற்றை கடைபிடிக்க வைக்க வேண்டும்.
- நபித்தோழர்கள் நபியவர்கள் மீது அன்பு கொண்ட விதங்களையும், சம்பவங்களையும் எடுத்துக் கூற வேண்டும்.

**பாடத்தின் நோக்கம்:**

1. நபி > அவர்கள் மீது அன்புகொள்வது என்பது அவருக்கு கட்டுப்பட்டு நடப்பது என்பதை மாணவர் புரிய வேண்டும்
2. நபியவர்களுக்கு கட்டுப்படுபவர் சுவனம் நுழைவார் எனவும், மாறுசெய்பவர் நரகில் நுழைவார் எனவும் கற்றுக்கொடுத்தல்.
3. நபியவர்களுக்கு மாறுசெய்யாமல் இருக்க மாணவர் பழக்கப்பட வேண்டும்.

பாடம் 10

# அல்குர்ஆன்



தனது தூதர் முஹம்மத் > அவர்களுக்கு அல்லாஹ் அல்குர்ஆனை இறக்கினான்.

அல்குர்ஆன் அல்லாஹ்வின் பேச்சாகும்.

அல்குர்ஆனை விரும்பி ஓதுவதும், அது கூறுவது போன்று செய்வதும் எனக்கு கடமையாகும்.

# கலந்துரையாடல்

1. தனது தூதர் முஹம்மத் > அவர்களுக்கு அல்லாஹ் இறக்கிய புத்தகம் எது?
2. பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

- நான் ஒரு முஸ்லிம். எனது வேதம் ..........................................................................
- நபி அவர்கள் கூறினார்கள்: "அல்குர்ஆனை .......................................................... பிறருக்கும் கற்றுக்கொடுப்பவர் உங்களில் சிறந்தவர் ஆவார்."

**“ ஆயதுல் குர்ஸியை மனனம் செய்து, ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னும் ஓதுவேன். ”**

## ஆசிரியருக்கு

- ஹிராக் குகையில் நபி அவர்களுக்கு அல்குர்ஆன் இறங்கிய நிகழ்வை இலகு நடையில் மாணவர்களுக்கு விளக்கவும்.
- மாணவர்களின் உள்ளங்களில் அல்குர்ஆன் மீதான கண்ணியத்தை விதைக்கவும்.
- நன்மைகள் கிடைப்பதால் அல்குர்ஆனை ஓதவும், அதை மனனம் செய்யவும் மாணவர்களைத் தூண்டவும். நபி > அவர்கள் கூறினார்கள்: "அல்குர்ஆனை தானும் கற்று, பிறருக்கும் கற்றுக்கொடுப்பவரே உங்களில் மிகவும் சிறந்தவர்" -புஹாரி 5027- மேலும் கூறினார்கள்: "அல்லாஹ்வின் வேதத்தில் யார் ஒரு எழுத்தை ஓதுகிறாரோ அவருக்கு 10 நன்மைகள் கிடைக்கின்றன. (الم) என்பதை ஒரு எழுத்து என கூறமாட்டேன். மாறாக (ا) ஒரு எழுத்து, (ل) ஒரு எழுத்து, (م) ஒரு எழுத்து ஆகும்." -திர்மிதி 2910-
- அல்குர்ஆனை கண்ணியப்படுத்தி, அது ஓதப்படும் போது அமைதியாக செவிமடுப்பது அவசியம் என்பதை புரியவைக்கவும். அல்லாஹ் கூறுகிறான், "குர்ஆன் ஓதப்படும்போது அதனை நீங்கள் செவிதாழ்த்தி (கவனமாகக்) கேளுங்கள்; அப்பொழுது நிசப்தமாக இருங்கள் - (இதனால்) நீங்கள் கிருபை செய்யப்படுவீர்கள்." -அல்குர்ஆன் 07:204-
- அல்குர்ஆனுக்கான வேறு பெயர்களைக் கற்றுக்கொடுக்கவும். உ+ம்: திக்ர், ஃபுர்கான், கிதாப்...
- அல்குர்ஆன் கூறுவது போல் செய்வது கடமை என்பதை விளக்கவும்.



**பாடத்தின் நோக்கம்:**

1. அல்குர்ஆன் அல்லாஹ்வின் பேச்சு என்பதை மாணவர் அறிதல்.
2. அல்குர்ஆனை மாணவர் கண்ணியப்படுத்தல்.
3. அல்குர்ஆனின் ஏவல்களை மாணவர் எடுத்து நடத்தல்.
4. அல்குர்ஆன் தடுத்தவற்றை விட்டும் மாணவர் விலகி நடத்தல்.

# ஃபிக்ஷ்

பாடம் 01

# சுத்தம்

“சுத்தமாக இருப்பது கட்டாயக் கடமையாகும். நாம் சுத்தமாக இருக்க வேண்டுமென அல்லாஹ் எமக்கு கட்டளையிட்டுள்ளான்.”



மலசலம் கழித்த பிறகு முன், பின் துவாரங்களை சுத்தமான நீரால் நன்கு கழுவுவது எனக்கு அவசியமாகும்.



தொழுவதற்கு முன் சுத்தமான நீரால் வுழு செய்வது எனக்கு அவசியமாகும்.



உடம்பையும், ஆடையையும், தொழும் இடத்தையும் சுத்தமான நீரால் கழுவி, சுத்தமாக வைத்திருப்பேன்.



# கலந்துரையாடல்

1 பொருத்தமானவற்றுக்கு நேராக (√) எனும் அடையாளத்தையும் (x) எனும் அடையாளத்தையும் இதடுக

தொழுதுவிட்டு வுழு செய்ய வேண்டும். ( )
வுழு செய்துவிட்டு தொழ வேண்டும். ( )

2 பின்வரும் இடைவெளியை நிரப்புக.

நான் ........................................................................................ வுழு செய்கிறேன்.

3 அழுக்கிலிருந்து ஆடையை சுத்தம் செய்வதற்கு கீழால் கோடிடுக.

தண்ணீர் மண்

4 பின்வரும் வசனத்தை பார்த்து எழுதுக.

சுத்தமான நீரால் மலசலம் வெளியாகும் இடத்தை சுத்தம் செய்வேன்.

சுத்தமான நீரால் மலசலம் வெளியாகும் இடத்தை சுத்தம் செய்வேன்.

..................................................................................................................................................

தொழுகைக்காக சுத்தமான நீரால் வுழு செய்வேன்.

தொழுகைக்காக சுத்தமான நீரால் வுழு செய்வேன்.

..................................................................................................................................................

சுத்தமான நீரால் வுழு செய்யாமல் தொழுகை கூடாது.

சுத்தமான நீரால் வுழு செய்யாமல் தொழுகை கூடாது.

அசுத்தமான இடத்தில் தொழமாட்டேன்.

அசுத்தமான இடத்தில் தொழமாட்டேன்.

தொழும் போது உடம்பு, ஆடை, தொழுமிடங்களிலுள்ள அசுத்தங்களை நீக்குவேன்.

தொழும் போது உடம்பு, ஆடை, தொழுமிடங்களிலுள்ள அசுத்தங்களை நீக்குவேன்.

### ஆசிரியருக்கு

- சுத்தமான நீர் என்றால் என்ன என்பதை உதாரணங்களுடன் விளக்கவும்.
- கற்கள், டிஷூ போன்றவற்றால் மலசலம் கழித்த இடங்களை சுத்தம் செய்ய முடியும் என்பதை விளக்கவும்.
- அழுக்குகளை நீக்கும் போது இடது கையை பயன்படுத்த மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும்.
- சுத்தம் பற்றிய குர்ஆன், ஹதீஸ்களை மாணவர்களுக்கு கூறவும்.
- மலசல கூடத்தினுள் நுழையும் போது (اللَّهُمَّ إِنِّي أعُوذُ بكَ مِنَ الخُبُثِ والخَبائِثِ.) எனும் துஆவை ஓதுமாறு கூறவும்.
- மலசல கூடத்திலிருந்து வெளியேறும் போது (غُفرانَكَ) எனும் துஆவை ஓதுமாறு கூறவும்.

**பாடத்தின் நோக்கம்:**

1. சுத்தம் செய்வதற்குத் தேவையான நீரின் பண்புகளை மாணவர் அறிதல்.
2. மலசலம் கழித்த பின் செய்ய வேண்டியவற்றை மாணவர் அறிதல்.
3. தொழுகையின் போது சுத்தமாக இருக்க வேண்டியவற்றை மாணவர் அறிதல்.

# வுழூ செய்யும் முறை

உமர்! நான் ஒரு முஸ்லிம். தொழுவதற்கு முன் சுத்தமான நீரால் நான் வுழு செய்துகொள்வேன்.

ஸைத்! நீ எப்படி வுழூ செய்கிறாய்?

வுழூ செய்யப் போகிறேன் என மனதால் நிய்யத் வைத்துவிட்டு, பின்வருமாறு செய்வேன்...



(بِسْمِ اللَّهِ) எனக்கூறி, இரு மணிகட்டுகளையும் மூன்று முறை கழுவுவேன்.



வாயைக் கொப்பளித்து, மூக்கினுள் தண்ணீர் செலுத்தி மூன்று முறை கழுவுவேன்.



மூன்று முறை முகத்தை கழுவுவேன்.



விலல் நுனிகளில் இருந்து முழங்கை வரை இரு கைகளையும் மூன்று முறை கழுவுவேன்.



தலையோடு சேர்த்து, இரு காதுகளையும் ஒரு தடவை நீரால் தடவிக்கொள்வேன்.



விரல் நுனிகளில் இருந்து கரண்டை வரை இரு கால்களையும் மூன்று முறை கழுவுவேன்.



சொல்லியதற்கு அல்லாஹ் உனக்கு நற்கூலி வழங்குவானாக!

## ஆசிரியருக்கு

- இப்பாடத்திற்காக மாணவர்களை வகுப்பிற்கு வெளியில் அழைத்துச் செல்லவும்.
- மாணவர்கள் பார்க்கும் விதத்தில் வுழு செய்யும் முறையை அவர்களுக்கு செய்து காண்பிக்கவும்.
- இதன் போது ஒவ்வொரு உறுப்பும் கழுவப்பட வேண்டிய எல்லையையும், கழுவும் முறையையும் விளக்கவும்.
- சில மாணவர்களை தேர்வு செய்து ஏனைய நண்பர்களுக்கு வுழுவை செய்துகாண்பிக்க வைக்கவும்.
- வுழுவின் போது ஒவ்வொரு உறுப்பும் கழுவப்பட வேண்டிய எல்லைகளைப் பற்றி மாணவர்களிடம் வினவவும்.
- மீண்டும் ஒரு முறை அனைவரும் பார்க்கும் வகையில் வுழுவை பூரணமாக செய்து காண்பிக்கவும்.

## கலந்துரையாடல்

1. கீழுள்ள இரு படங்களிலும் முழங்கை மற்றும் கரண்டை எவை என்பதை கண்டறியச் செய்து, அவற்றில் வட்ட வரையச் செய்து, அவற்றின் பெயர்களை எழுதுமாறு பணிக்கவும்.



..............................................



..............................................

2 பொருத்தமான இலக்கத்தை இட்டு, வுழூவின் படித்தரங்களை வரையறை செய்க.

முகத்தை கழுவுவேன்

மூக்கினுள் நீர் செலுத்துவேன்

கரண்டை வரை இரு கால்களையும் கழுவுவேன்

தலையோடு சேர்த்து இரு காதுகளையும் தடவுவேன்

முழங்கை வரை இரு கைகளையும் கழுவுவேன்

மணிக்கட்டு வரை இரு கைகளையும் கழுவுவேன்

3 பின்வரும் வசனங்களை பார்த்து எழுதுக.

வுழூவை ஆரம்பிக்கும் போது (بِسْمِ اللّٰهِ) எனக் கூறுவேன்.

.......................................................................................................................

சுத்தமான நீரால் நான் வுழூ செய்வேன்.

.......................................................................................................................

வுழூவின் ஒவ்வொரு உறுப்பையும் ஒன்றன் பின் ஒன்றாக கழுவுவேன்

.......................................................................................................................

வுழூவின் உறுப்புகள் அனைத்திலும் நீர் படுமாறு பார்த்துக்கொள்வேன்.

.......................................................................................................................

வுழு செய்து முடிந்ததும் பின்வரும் துஆவை ஓதிக்கொள்வேன்.

أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ،
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ.

ஆசிரியருக்கு

- வுழுவின் ஒவ்வொரு உறுப்புக்களையும் ஒரு தடவை கழுவுவது கட்டாயம் என்பதையும், மூன்று முறை கழுவினால் வுழு பூரணமடையும் என்பதையும் மாணவர்களுக்கு கூறுக.
- வுழு செய்து முடிந்ததும் ஓதும் துஆவை மாணவர்களுக்கு மனனம் செய்யுமாறு பணிக்கவும். நபி அவர்கள் கூறினார்கள் : "உங்களில் ஒருவர் முழுமையான முறையில் வுழு செய்துவிட்டு, أشهد أن لا إله إلا الله وأشهد أن محمدا عبده ورسوله என்று கூறினால், சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் அவருக்காகத் திறக்கப்படுகின்றன. அவற்றில் தாம் நாடிய வாசலில் அவர் நுழைந்துகொள்ளலாம்." -முஸ்லிம் 234-
- தண்ணீர் எனும் அல்லாஹ்வின் அருளை வீண்விரயம் செய்யாமல் வுழு செய்யுமாறு மாணவர்களுக்கு பணிக்கவும்.

**பாடத்தின் நோக்கம்:**

1. சுத்தம் செய்யும் நீரின் தன்மையை மாணவர் அறிந்திருத்தல்.
2. நிய்யத் எவ்வாறு வைக்க வேண்டும் என்பதை மாணவர் அறிந்திருத்தல்.
3. முழுமையான முறையில் வுழு செய்வதற்கு மாணவர்களை பயிற்றுவித்தல்.

# கடமையான தொழுகைகள்

தொழுகை என்பது இஸ்லாத்தின் இரண்டாவது கடமையாகும்.

கடமையான தொழுகைகள் ஒரு நாளைக்கு ஐந்து உள்ளன.



| ஃபஜ்ர் | லுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 02 | 04 | 04 | 03 | 04 |
| ரக்அத்கள் | ரக்அத்கள் | ரக்அத்கள் | ரக்அத்கள் | ரக்அத்கள் |



# கலந்துரையாடல்

1 விடுபட்ட இஸ்லாத்தின் கடமையை எழுதுக.

இரு கலிமாக்கள் - ........................................ - நோன்பு - ஸகாத் - ஹஜ்

2 கடமையான தொழுகைகளை ஒழுங்குபடுத்துக.

இஷா | லுஹர் | மஃரிப் | அஸர் | ஃபஜ்ர்

3 தொழுகைகளை அவற்றின் ரக்அத்துகளுடன் இணைக்குக.

ஃபஜ்ர் | லுஹர் | அஸர் | மஃரிப் | இஷா

04 | 02 | 03 | 04 | 04

4 சரியான விடையின் கீழ் கோடிடுக.

ஒவ்வொரு நாளும் நான் முதலில் தொழுவது...

லுஹர் தொழுகை | ஃபஜ்ர் தொழுகை

5 நான்கு ரக்அத் தொழுகைகளுக்கு ஒரே நிறத்தில் நிறந்தீட்டுக.

ஃப்ஜ்ர் அஸர் மஃரிப்

லுஹர் இஷா

6 மூன்று ரக்அத் தொழுகைக்கு வட்ட அடையாளமிடவும்.

ஃப்ஜ்ர் அஸர் மஃரிப்

லுஹர் இஷா

7 பகலில் தொழும் தொழுகைகளுக்கு வட்ட அடையாளமிடவும்.

ஃப்ஜ்ர் அஸர் மஃரிப்

லுஹர் இஷா

ஃப்ஜ்ர் அஸர் மஃரிப்

லுஹர் இஷா

9 பின்வரும் வசனங்களை பார்த்து எழுதுக.

தொழுகையை அதன் முதல் நேரத்தில் தொழுவேன்.

..........................................................................................

நேரத்திற்கு தொழுவது சுவனம் நுழைய காரணமாக இருக்கும்.

..........................................................................................

பள்ளியில் தொழுதால் இமாம் செய்வது போல் நானும் செய்வேன்.

..........................................................................................

ஆசிரியருக்கு

- இஸ்லாத்தின் கடமைகள் ஐந்து என்பதை மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும்.
- ஒரு நாளைக்கு 05 வேளை தொழுவது 50 வேளை தொழுத நன்மையைப் பெற்றுத் தரும் என்பதை (புஹாரி 349) எனும் ஹதீஸை அடிப்படையாக வைத்துக் கூறவும்.
- தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுமாறு மாணவர்களை பயிற்றுவிக்கவும். ஏனெனில் தொழுகை இஸ்லாத்தின் இரண்டாவது கடமையாகவும், சுவனம் செல்ல காரணமாகவும் இருக்கிறது. தொழுகையை விடுவது நரகம் செல்ல காரணமாக அமைகிறது. நபி அவர்கள் கூறினார்கள், "எமக்கு இறைநிராகரிப்பாளர்களுக்கு இடையிலுள்ள வேறுபாடு தொழுகையாகும். யார் அதை விடுகிறாரோ அவர் இறைநிராகரிப்பாளர் ஆகிறார்." -திர்மிதி 2621-

**பாடத்தின் நோக்கம்:**

1. இஸ்லாத்தில் தொழுகையின் முக்கியத்துவத்தை மாணவர் அறிதல்.
2. ஒரு நாளில் உள்ள ஐவேளைத் தொழுகைகளையும் மாணவர் அறிதல்.
3. ஒவ்வொரு தொழுகையினதும் ரக்அத்களை மாணவர் அறிதல்.

# தொழும் முறை

அதான் சொல்லும் சப்தம் கேட்ட ஸைத் வுழு எடுத்து, தொழுகைக்கு செல்ல தயாரானான். அப்போது உமர் "எவ்வாறு தொழுவது" எனக் கேட்டான். அதற்கு ஸைத்:

முதலில் கிப்லாவை முன்னோக்குவேன்.



பின்னர் தோல் புஜம் வரை எனது இரு கைகளையும் உயர்த்தி, ஸுஜூது செய்யும் இடத்தைப் பார்த்து, "அல்லாஹு அக்பர்" என இஹ்ராம் தக்பீரைக் கட்டுவேன்.



சூறதுல் ஃபாதிஹாவையும், வேறு ஏதாவது மனனமிட்ட சூறாவையும் ஓதிக்கொள்வேன்.



பின்னர் தக்பீர் சொல்லி, ருகூவிற்கு செல்வேன். அதில் "سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْم" என மூன்று முறை ஓதிக் கொள்வேன்.



ருகூவிலிருந்து எழும்பும் போது,
سَمِعَ اللَّهُ لِمَنْ حَمِدَهُ رَبَّنَا وَلَكَ الْحَمْدُ
எனக் கூறி நிலைக்கு வருவேன்.



பின்னர் தக்பீர் கூறி ஸுஜூதிற்கு செல்வேன். அதில் سُبْحَانَ رَبِّي الْأَعْلَى என மூன்று முறை ஓதிக்கொள்வேன்.



தக்பீர் கூறி நடு இருப்பில் அமர்வேன்.
رَبِّ اغْفِرْ لِيْ رَبِّ اغْفِرْ لِيْ
என ஓதிக்கொள்வேன்.



பின்னர் தக்பீர் கூறி இரண்டாவது ஸுஜூதிற்கு செல்வேன். அதில் سُبْحَانَ رَبِّي الْأَعْلَى என மூன்று முறை ஓதிக்கொள்வேன்.



தக்பீர் கூறி இரண்டாம் ரக்அத்திற்காக எழுந்திடுவேன். முதல் ரக்அத்தில் செய்தது போன்று இதிலும் செய்வேன்.



இரண்டாம் ரக்அத்தின் முடிவில் முதலாம் தஷஹ்ஹுதிற்காக அமர்வேன்.



ஏனைய ரக்அத்களை முதல் இரண்டு ரக்அத்களை தொழுதது போன்று நிறைவேற்றுவேன்.



இரண்டுக்கு மேற்பட்ட தொழுகையில் இறுதி தஷஹ்ஹுதிற்காக அமர்ந்து, அதில் அத்தஹிய்யாத்தை ஓதிக்கொள்வேன். அதில் நபி அவர்கள் மீது ஸலவாத்து கூறுவேன். பின்னர் வலது பக்கமும் இடது பக்கமும் திரும்பி,
اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰه எனக் கூறி தொழுகையை நிறைவு செய்வேன்.



ஆசிரியருக்கு

- பாடசாலையின் தொழும் இடத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்லவும்.
- தொழுகையை அனைத்து மாணவர் முன்னிலையிலும் செயல்ரீதியாக தொழுது காட்டவும்.
- சில மாணவர்களைத் தேர்வு செய்து, தொழுகையை முழுமையாக ஏனைய நண்பர்கள் முன்னிலையில் தொழுதுகாட்டுமாறு பணிக்கவும். துஆக்கள் ஓதும் போது விடும் தவறுகளை ஏனைய மாணவர்களுக்கு திருத்துமாறு பணிக்கவும்.
- இறுதியாக மீண்டும் ஒரு முறை மாணவர்கள் முன்னிலையில் தொழுகையை பரிபூரணமாக தொழுது காட்டவும்.

# கலந்துரையாடல்

1 சரியான விடையின் கீழ் கோடிடுக.

அ. தொழுகையில் நான் பார்க்க வேண்டிய இடம்:

கூரை　　சுவர்　　ஸுஜூத் செய்யும் இடம்

ஆ. ருகூவில் நான் கூற வேண்டியது:

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْم　　سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَى

இ. ருகூவில் எனது இரு மணிக்கட்டுகளையும் வைக்கும் இடம்:

இரு முட்டங்கால்கள்　　இரு கெண்டைக் கால்கள்

ஈ. கீழுள்ள படங்களில் முஸ்லிம்களின் கிப்லாவைக் குறிப்பது:







**2** பகுதி (அ) வில் இருப்பவற்றை பகுதி (ஆ) உடன் இணைக்குக.

| பகுதி (அ) | பகுதி (ஆ) |
| --- | --- |
| ஸுஜூதில் ஓதுவது | سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ |
| ருகூவில் ஓதுவது | سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَى |
| இரு ஸஜ்தாவுக்கு இடையில் ஓதுவது | سَمِعَ اللَّهُ لِمَنْ حَمِدَهُ |
| ருகூவிலிருந்து எழும் போது ஓதுவது | رَبِّ اغْفِرْ لِيْ |
| | اَللَّهُ أَكْبَرُ |

**3** இடைவெளியை நிரப்புக.

தொழுகையை முடிக்கும் போது கூற வேண்டியது

..............................................................................................................

**4** பின்வரும் வசனத்தை பார்த்து எழுதுக.

முதலாம் ரக்அத்தில் செய்தது போன்று ஏனைய ரக்அத்களிலும் செய்து, தொழுகையை நிறைவேற்றுவேன்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

ஆசிரியருக்கு

- தொழுகையின் உறுப்புகள் ஏழு என்பதை மாணவர்களுக்கு தெரியப்படுத்தவும். அவை: மூக்குடன் சேர்த்து நெற்றி, இரு உள்ளங்கைகள், இரு முழங்கால்கள், இரு கால்களினதும் நுனிப்பகுதிகள்.
- முதல் அத்தஹிய்யாத்திற்கும், இறுதி அத்தஹிய்யாத்திற்கும் எவ்வாறு அமர வேண்டும் என்பதை மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும்.
- ருகூவிலும், ஸுஜூதிலும் ஓத வேண்டிய துஆக்களை மூன்று முறை ஓதுவது ஆகுமானதாகும். அதை விடவும் அதிக தடவைகள் ஓத முடியும் என்பதை விளக்குக.
- "அல்லாஹ்வின் தூதர் > அவர்கள் (தொழுகையை முடிக்கும்போது) வலப் பக்கத்திலும் இடப் பக்கத்திலும் (முகத்தைத் திருப்பி இருமுறை) சலாம் கூறுவார்கள். (அவ்வாறு திரும்பும்போது) அவர்களுடைய கன்னத்தின் வெண்மையை நான் காண்பேன்".-முஸ்லிம் 582- எனும் ஹதீஸிற்கு இணங்க ஸலாம் கூறி, தொழுகையை முடிக்கும் முறையை மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும்.

**பாடத்தின் நோக்கம்:**

1. தொழுகையின் ருக்குன்களையும், வாஜிப்களையும் பேணி மாணவர் பூரணமாக தொழுகையை நிறை வேற்றுதல்.
2. இஹ்ராம் தக்பீரில் எவ்வாறு கையை உயர்த்த வேண்டும் என்பதை மாணவர் தெரிந்திருத்தல்.
3. ருகூவிலும், ஸுஜூதிலும் ஓதும் துஆவின் வித்தியாசத்தை மாணவர் அறிதல்.

# அத்தஹிய்யாத்து

“ اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ، اَلسَّلَامُ عَلَيْكَ
أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ، اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلَى
عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ، أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللّٰهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ ”

## அத்தஹிய்யாத்தை எப்போது ஓத வேண்டும்?



தொழுகையில் இரண்டாம் ரக்அத்தில் அத்தஹிய்யாத்தை ஓத வேண்டும். இதற்கு முதலாம் தஷஹ்ஹுத் எனக் கூறப்படும். அடுத்து தொழுகையின் கடைசி ரக்அத்திலும் அத்தஹிய்யாத் ஓத வேண்டும். இதற்கு கடைசி தஷஹ்ஹுத் எனக் கூறப்படும்.

# கலந்துரையாடல்

1 கீழுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

(இரண்டாவது - இறுதி - முதலாம்)

1. முதலாம் தஷஹ்ஹுத் ................................................ ரக்அத்திற்குப் பின் ஓத வேண்டும்.
2. கடைசி தஷஹ்ஹுத் ................................................ ரக்அத்திற்குப் பின் ஓத வேண்டும்.

2 ஒரு தஷஹ்ஹுத் உள்ள தொழுகைகளை ஒரு பகுதியிலும், இரண்டு தஷஹ்ஹுத் உள்ள தொழுகைகளை இன்னொரு பகுதியிலும் வகைப்படுத்துக.

- இஷாத் தொழுகை
- அஸர் தொழுகை
- மஃரிப் தொழுகை
- ஃபஜ்ர் தொழுகை
- லுஹர் தொழுகை

| ஒரு தஷஹ்ஹுத் | இரண்டு தஷஹ்ஹுத் |
|---|---|
| 1. ................................................ | 1. ................................................ |
| 2. ................................................ | 2. ................................................ |
| 3. ................................................ | 3. ................................................ |
| 4. ................................................ | 4. ................................................ |

2 பின்வரும் வசனங்களைப் பார்த்து எழுதுக.

தொழுகையின் அனைத்து செயல்களையும் இமாம் செய்வது போன்றே நானும் செய்வேன்.

....................................................................................................

....................................................................................................

தொழுகையை ஆரம்பிக்கும் போது இஹ்ராம் தக்பீர் கட்டுவேன்.

....................................................................................................

....................................................................................................

**ஆசிரியருக்கு**

- தஷஹ்ஹுதின் போது எவ்வாறு விரலை உயர்த்த வேண்டும் என்பதை மாணவர்களுக்கு விளக்கவும். வலது கையின் சுண்டு விரலையும், மோதிர விரலையும் மடக்கி, நடு விரலையும் பெரு விரலையும் சேர்த்து வட்டம் போல் அமைத்து, ஆட்காட்டி விரலை நீட்ட வேண்டும்.
- அத்தஹிய்யாத்தை மாணவர்களுக்கு புரியும் வகையில் மனனம் செய்ய பயிற்றுவிக்கவும்.
- இரண்டு ரக்அத் தொழுகையில் ஒரு தஷஹ்ஹுதும், மூன்று மற்றும் நான்கு ரக்அத் தொழுகையில் இரண்டு தஷஹ்ஹுத்களும் உள்ளன என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.

**பாடத்தின் நோக்கம்:**

1. தொழுகையில் தஷஹ்ஹுதின் இடத்தை மாணவர் அறிதல்.
2. அத்தஹிய்யாத்தை மாணவர் மனனம் செய்தல்.
3. தஷஹ்ஹுதின் போது சரியான முறையில் அமர்தல்.

பாடம் 06

# நபி ﷺ மீது ஸலவாத்து கூறுதல்

“ اَللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ، اَللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ. ”

## ஸலவாத்து எப்போது கூற வேண்டும்?

கடைசி தஷஹ்ஹுதை ஓதிய பிறகு ஸலாம் கொடுப்பதற்கு முன் நபி அவர்கள் மீது ஸலவாத்து கூற வேண்டும்.

## கலந்துரையாடல்

1. பின்வரும் இடைவெளியை நிரப்புக.

اَللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا صَلَّيْتَ عَلَى .............. وَعَلَى آلِ .............. إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ، اَللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ ...........، كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ.

**2** இப்பாடத்தில் இரு நபிமார்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றைக் குறிப்பிடுக.

.................................................... ....................................................

**3** சரியான விடையின் கீழ் கோடிடுக.

நபி > அவர்கள் மீது ஸலவாத்துக் கூறும் சந்தர்ப்பம்...

1. முதலாம் ரக்அத் முடிந்த பிறகு.
2. கடைசி தஷஹ்ஹுத் ஓதிய பிறகு.

**ஆசிரியருக்கு**

- தொழுகையை சரியான முறையில் தொழுது காட்டி, தஷஹ்ஹுத் இடம்பெறும் இடங்களையும் சுட்டிக்காட்டி, அதில் அத்தஹிய்யாத்தை ஓதும் முறையையும் கற்றுக்கொடுக்கவும்.
- நபி > அவர்களின் பெயரைக் கேட்கும் போதும், கடைசி தஷஹ்ஹுதிலும், வெள்ளிக்கிழமையிலும் அதிகம் ஸலவாத்து கூறுவதற்கு மாணவர்களை பயிற்றுவிக்கவும். நபி > அவர்கள் கூறினார்கள், "யார் என் மீது ஒரு தடவை ஸலவாத் கூறுகிறாரோ அல்லாஹ் அவர் மீது பத்து தடவை ஸலவாத் கூறி, அவரின் பத்து பாவங்களை மன்னித்து, பத்து அந்தஸ்த்துகளை உயர்த்துகிறான்." -நஸாஈ 1297-

**பாடத்தின் நோக்கம்:**

1. தஷஹ்ஹுதில் ஓத வேண்டிய ஸலவாத்தை மாணவர் மனனம் செய்தல்.
2. தொழுகையில் நபியவர்கள் மீது ஸலவாத்து சொல்ல வேண்டிய இடத்தை மாணவர் அறிதல்.
3. முதலாம் தஷஹ்ஹுதிலும், கடைசி தஷஹ்ஹுதிலும் அமர வேண்டிய சரியான முறையை மாணவர் அறிதல்.

# தொழுகையை முறிப்பவை

பின்வருபவைகளில் ஏதாவது ஒன்றை செய்வதன் மூலம் தொழுகை முறிந்து

| | |
|---|---|
| உண்ணுதல் | பருகுதல் |
| கதைத்தல் | சிரித்தல் |
| வுழு முறிதல் | அதிகமாக அசைதல் |

# கலந்துரையாடல்

1. உமர் தொழும் போது தனது வாயில் ஒட்டியிருந்த சாக்லட் துண்டுகளை விழுங்கிவிட்டான். உமரின் தொழுகை ஏற்றுக்கொள்ளப்படுமா? முறிந்துவிடுமா?

2. (உண்ணுதல் - சிறுநீர் கழித்தல் - மலம் கழித்தல் - காற்று பிரிதல்)

சரியான விடையை இடைவெளியில் எழுதுக.

............................................................ அல்லது ............................................................

அல்லது ............................................................ ஆகியவற்றால் வுழூ முறிந்துவிடும்.

3. தொழுகையை முறிக்கக்கூடியவைகளுக்கு நிறம் தீட்டுக.

- கண்களை மூடுதல்
- சிரித்தல்
- கதைத்தல்
- மூச்சுவிடுதல்
- பருகுதல்
- உண்ணுதல்
- தும்முதல்

4 பின்வரும் வசனங்களை பார்த்து எழுதுக.

தொழுகையை முறிப்பவற்றை ஒரு போதும் செய்யமாட்டேன்.

.............................................................................................................................

கடமையான தொழுகை முறிந்துவிட்டால் அதை மீண்டும் தொழுவது எனக்கு கடமையாகும்.

.............................................................................................................................

.............................................................................................................................

தொழுகைக்கு சுத்தமாகவே செல்வேன்.

.............................................................................................................................

ஆசிரியருக்கு

- தொழுகையில் இறையச்சத்துடன் எவ்வாறு இருப்பது என்பதை மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும்.
- வுழுவை முறிப்பவற்றையும், தொழுகையை முறிப்பவற்றையும் தெளிவாக மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும்.
- தொழுகையை முறிக்கும் அதிகமான அசைவுகள் என்றால் என்ன என்பதை மாணவர்களுக்கு விளக்கவும்.

**பாடத்தின் நோக்கம்:**

1. தொழுகையை முறிப்பவற்றை மாணவர் அறிதல்.
2. வுழுவை முறிப்பவற்றுக்கும், தொழுகையை முறிப்பவற்றுக்கும் இடையிலுள்ள தொடர்பை மாணவர் அறிதல்.
3. தொழுகையை முறிப்பவற்றை செய்யாமல் தவிர்ந்திருத்தல்.